'திவு எண்' M. 6311 ☆ தொலைபேசி: 551331 ☆ தோற்றம்: 1953 ☆ விலை 7 காசு ☆ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன்

மலர்: 20] சென்னை: கார்த்திகை 14 (29—11—72) புதன் வெளியூர்: கார்த்திகை 15 (30—11—72) வியாழன் [இதழ்: 138

இந்தியாவுக்குக் கடன் கொடுத்துள்ள நாடுகள்

பொறுத்திருந்துபெற்றுக்கொள்ள இசைந்துள்ளன

"இந்தியாவுக்குக் கடன் கொடுத்துள்ள நாடுகளில் பல, பொறுத்திருந்து வாங்கிக்கொள்ள இசைந்துள்ளன" என்று நிதியமைச்சர் சவாண், மக்களவையில் தெரிவித்தார்.

"வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் உதவியுடன் உள்நாட்டில் திரட்டப்படுவதும் சேர்ந்து திட்ட முதலீட்டுக்குப் போதுமானதாக இருக்கும்" என்று அவர் தெரிவித்தார்.

'சதி'காரர்களே---

உங்கள் முகத்திரை கிழியும் நாள் தொலைவில் இல்லை

—★—

சந்திக்க வேண்டிய இடத்தில் சந்திப்போம்

அரசியல் புரட்டர்களுக்கு அமைச்சர் செ. மாதவன் அறைகூவல்

சென்னை, நவ. 29—

" தி. மு. கழக ஆட்சியில் இலஞ்சம் -- ஊழல் என்று கூறுகிருர்களே தவிர, 'எங்கே ஊழல் -- எங்கே என்ன நடந்தது' என்றல்லவா குற்றம் சுமத்துவோர் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்?

" ஓர் ஆட்சியிலே இலஞ்சம் இருக்க வேண்டும் -- ஊழல் இருக்க வேண்டும் என்று யாராவது ஒப்புக்கொள்வார்களா? 'அவை இருக்கக்கூடாது' என்கின்ற பொது அறிவு கூடவா ஆட்சியில் இருப்பவர்களுக்கு இருக்காது?

" திரும்பத் திரும்ப, 'ஊழல் -- இலஞ்சம்' என்று சொல்லிக்கொண்டிருக்கிருரே தவிர, புரட்சித தலைவரிடம் நான் பகிரங்கமாகக் கேட்ட கேள்வி எதற்காவது இதுவரை அவர் பதில் சொல்லியிருக்கிருரா?

" தி. மு. கழக ஆட்சி தூய்மையான ஆட்சி என்று நான் நிரூபிக்கத் தயார், ஊழல் -- ஊழல் என்று கூறுகின்ற புரட்சித் தலைவரே -- நீரேகூட நீதிபதியாக இரும்; என்ன குற்றச்சாட்டு என்பதை மக்கள் மன்றத்தில் வைத்துவிட்டு -- அதில் ஏதாவது ஒரு குற்றச்சாட்டையேனும் நிரூபிக்க நீங்கள் தயார்தானு?

" குடியரசுத் தலைவரிடம் புரட்சித் தலைவர் கொண்டு சென்ற குற்றச்சாட்டுக்களை மக்கள் மன்றத்திலே அவர் சொல்லாமல் இருக்கலாம்; ஆனால் அவர் வாயாலேயே அந்தக் குற்றச்சாட்டுக்களைச் சொல்லவைக்கும் ஆற்றல் எங்களுக்கு உண்டு!

" கையெழுத்துப் போட்டு குடியரசுத் தலைவரிடம் அவர் தந்த குற்றச்சாட்டுகள் என்னென்ன? ஏதாவது ஒன்ருவது தமிழ மக்களிடம் பேசபபடாத புதிய குற்றச்சாட்டுக்களா? மாற்றுக் கட்சித தோழர்களும், பத்திரிகைகளும் காழ்ப்புணர்ச்சியோடு கழகத்தின் மீது சுமத்தி ஓய்ந்தவைதானே அவை? அதில் ஒன்றுகூடத தமிழ்நாட்டு மக்களுக்கு இரகசியமானதன்று; அதில் எந்தப் புதுமையும் இல்லை; ஆனுல், இப்படியெல்லாம் குற்றச்சாட்டுகளை என்று கூறி மக்களை ஏமாற்றுகிருர்களே -- அதுதான் புதுமையாக இருக்கிறது!

" இப்படியெல்லாம் சொல்லிவிடுவதாலேயும், கற்களைப் போடுவதனுலேயும் இந்த ஆட்சி கவிழ்ந்துவிடுமா? கல்லைப் போடுவதும் -- கலகம் செய்வதும் என்றிருந்தால் கலகத்துக்குக் கலகம் செய்யத் தொடங்கினுல் நாட்டிலே அமைதி இருக்குமா?

" தி. மு. கழகத்தின் கொள்கையைச் சந்திக்கட்டும்; கொள்கைக்குக் கொள்கை -- வாதத்துக்கு வாதம் சந்திக்க முடியாதவர்கள் இந்த ஆட்சியை எப்படியாவது கவிழ்த்துவிடலாம்' என்று திட்டமிட்டு, எந்த இடத்திலே சந்தித்தார்கள் -- திட்டம் போட்டார்கள் என்பதெல்லாம் எங்களுக்குத் தெரியும்; அதை நாங்கள் சந்திக்க வேண்டிய இடத்தில் சந்திக்கத்தான் போகிருேம்"

—என்று அமைச்சர் சே. மாதவன் அவர்கள் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டு, ஓட்கே காங்கிரசுத் தலைவருக்கு அறைகூவல் விடுத்தார்.

சென்னை 8-வது வட்டம் அன்பு கலைக் கழகச் சார்பில் இராயபுரம் பனைமரத் தொட்டியில் நடைபெற்ற கூட்டத்திற்கு கு. இராமலிங்கம் தலைமை தாங்கினுர்.

திரு. சி. சிட்டிபாபு எம்.பி., இரா. மு. மனோகரன் எம்.சி., வட்டச் செயலாளர் சு. இராமதாசு, பகுதிச் செயலாளர் பி. ஏ. என. இராசரத்தினம், மு. வேதாசலம் எம்.எல்.ஏ. ஆகியோர் உரையாற்றினர்.

வீழ்ச்சி உங்களுக்கு -- வளர்ச்சி எங்களுக்கு!

இறுதியில் அமைச்சர் செ. மாதவன் ஆற்றிய உரையாவது:—

" தி. மு. கழகமும் -- கழகத்தின் தலைவர்களும், மக்கள் சக்தியை நம்பியே வளர்ந்தவர்கள்; கழக நண்பர்கள் எப்பொழுதும் பத்திரிகைகளை நம்பியது கிடையாது; மக்களை நேருக்கு நேர் சந்தித்து அவர்களோடு தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து வளர்ந்தவர்கள்.

புரட்சித் தலைவரே—இந்தப் பாலபாடத்தைக்கூட உணராமல், கொட்டை கொட்டையாக நீர் சொல்லும் செய்திகளை எல்லாம் பரபரப்பாகப் போட்டும் பத்திரிகைகளை விற்கின்றவர்களை நம்பி உங்களுடைய உற்சாகத்தைப் பெருக்கிக்கொண்டு வருகிறீர்; இதையெல்லாம் கண்டு எங்கள் தோழர்களும் -- நாங்களும் ஒரு போதும் கவலைப்பட்டது கிடையாது.

நீர் இப்படி நம்பிக்கொண்டு உற்சாகம் கொள்வதுதான் உமது வீழ்ச்சியாகவும் --எங்கள் வளர்ச்சியாகவும் இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கொள்கையற்றவர் கோமாளித்தனம்

கழகப் பேச்சாளர்கள், நாடு நகரங்கள்தோறும் —பட்டிதொட்டிகள்தோறும் இலட்சோபலட்சம்

(4-ம் பக்கம் பார்க்க)

நாடு கிடுகிடுக்கப் போகிறது!

பயந்தாங்கொள்ளிகளே---ஓடி ஒளிந்துகொள்ளுங்கள்!

—★—

பதினைந்து நாள் தவணை தந்துவிட்டார் 'புரட்சித் தலைவர்'

" நாட்டையே குலுக்குகின்ற மாபெரும் போராட்டம்-- இன்னும் பதினைந்து நாட்களில் அறிவிப்பு--புரட்சித் தலைவர் பேச்சு."

—செய்தித் தலைப்பு

சென்னையில் சென்ற வாரம் 'நில நடுக்கம்' ஏற்பட்டதாகச் செய்தித் தாள்களில் வந்த செய்தியைப் பார்த்துத்தான் சென்னை வாசிகளே தெரிந்துகொண்டனர்! 'அடடா--நமக்குத் தெரியாமல் போய்விட்டதே' என்று பலரும் அங்கலாய்த்தனர்!

நல்ல வேளை--புரட்சியார் முன்னறிவிப்பே கொடுத்துவிட்டார்! இன்னும் 15 நாள் காத்திருப்போம்--நில நடுக்கத்தைப் பார்க்கத் தவறியவர்கள், இதையாவது பார்த்து ரசிக்கலாம்!

'நில நடுக்கம்' சென்னையில் மட்டும்தான்--அதுவும் சில விநாடிகள் ஏற்பட்டு நின்றுவிட்டது; ஆனுல் புரட்சியார் நடத்தப்போகும் போராட்டம் நாட்டையே அல்லவா குலுக்கப்போகிறது!

நாட்டு மக்களே--இதைக் காணத் தவருதீர்கள்! நாட்டு மக்கள் எல்லோருக்கும் காணும் வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதற்காகத்தான் 15 நாள் முன்னதாகவே அறிவித்திருக்கிருர்--புரட்சித் தலைவர்!

ஆர்த்தால்--மறியல்--பேரணியெல்லாம் வெறும் புஸ் வாணம்தான்! அதை மட்டும் வைத்துக்கொண்டு கணக்கும் போட்டு விடாதீர்கள்; இப்போது வெடிக்கப்போகிறதே--அதுதான் 'ஹைட்ரஜன்' குண்டு!

ஆனுல் ஒன்று; அந்தக் 'கிடுகிடு' போராட்டத்தைப் பார்க்கத் தைரியம் இருப்பவர்கள்தான் பார்க்க வேண்டும்; அதற்கு இப்போதிலிருந்தே மனதைத் தைரியப்படுத்திக்கொள்ள வேண்டும்!

" நாடே கிடுகிடுக்கும்போது, நாமெல்லாம் எங்கே போய் அமர்ந்துகொண்டு அந்தப் போராட்டத்தைப் பார்ப்பது" என்று மட்டும் கேட்காதீர்கள்!

நாடு கிடுகிடுக்கும்போது வீடு 'கிடுகிடு'க்காதா? அதைத் தாங்கிக் கொள்ள முடியாதவர்கள், வேறு நாட்டுக்கே போய்விடலாம்; அதற்காகத்தான் பதினைந்து நாள் தவணை கொடுத்திருக்கிருர் புரட்சிப் பெருந்தலைவர்! எங்கே -- பார்க்கலாம் -- நாட்டு மக்களில் தைரியசாலிகள் எத்தனை பேர் என்று!

நம்மையெல்லாம் சோதித்துப் பார்க்கத்தான் இந்த 'அரசியல் வித்தகர்' இப்படி ஓர் அதிர் வேட்டைப் போட்டிருக்கிருர்!

என்ன நடக்குமோ -- ஏது நடக்குமோ -- நாமறியோம்! பதினைந்து நாள்வரை பொறுத்திருந்து பார்க்கலாம்!

டிச. 2-ல் சட்டமன்றக் கூட்டம்

தமிழக ஆளுநர் கூட்டுகிருர்

சென்னை, நவ. 29—

தமிழக சட்டப் பேரவையின் அடுத்த கூட்டத்தை டிசம்பர் 2-ந் தேதி காலை 11 மணியளவில் ஆளுநர் கே. கே. ஷா கூட்டியிருக்கிருர்.

சட்டமன்ற மேலவையும் அன்று பிற்பகல் 4-மணிக்குக் கூடும்.

நவம்பர் 13-ந் தேதி கூடிய சட்டமன்றத்தைத் திடீரென பேரவைத் தலைவர் மதியழகன் டிசம்பர் 5-ந் தேதி வரை ஒத்திவைத்தார்.

பின்னர் ஆளுநர் அவசரச் சட்டம் மூலம் கூட்டத் தொடரை முடித்து (புரோரோக்) செய்து வைத்தார்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தந்தி மூலம் தகவல்

டிசம்பர் 2-ந் தேதியன்று ஆளுநர் சட்டமன்றத்தைக் கூட்டியுள்ள அறிவிப்பானது, தந்தி மூலம் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மூன்று தேக்கங்களில் நீர் நிரம்பியிருக்கின்றன

சென்னை, நவ. 28—

சென்னை நகரில் அண்மையில் பெருமழை பெய்துள்ளதைத் தொடர்ந்து நகரிலுள்ள மூன்று தேக்கங்களிலும் பெரும் அளவுக்கு நீர் நிரம்பியுள்ளது.

புழலேரியில் நீர் மட்டம் 13.893 மீட்டர் (முழு அளவு 14.597); சோழவரத்தில் 14.992 மீட்டர் (முழு அளவு 19.659 மீட்டர்); பூண்டியில் 38.831 மீட்டர் (முழு அளவு 42.002).

"சென்ற ஆண்டு நிலவரத்துடன் ஒப்பிடும்போது -- சப்ளை போதுமானதாக இல்லாவிடினும் -- தற்போதுள்ள நிலையில் நகரின் தேவையை (நாளொன்றுக்கு 5 கோடி காலன் தண்ணீர் சப்ளை) ஆகஸ்டு வரையில் வழங்க முடியும" என்று மாநகராட்சி அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

குழப்பவாதிகளின் குழப்ப நிலை

'பதவி ஆசை நிறைவேறாததால் எதையும் செய்யத் துணிந்தனர்'

'எனக்கும் வலை விரித்துக் கடைசியில் ஏமாந்தனர்'

பேராசிரியர் அன்பழகன் வெளியிடும் இரகசியம்

சென்னை, நவ. 28—

"ஒட்டுக் காங்கிரசுத் தலைவர், 'போராட்டம் — போராட்டம்' என்று கூறி நாட்டை மட்டும் குழப்பவில்லை — தானும் குழம்பிப் போயிருக்கிறார் ! கலைஞர் எலுமிச்சம் பழம் கொடுத்து அனுப்பும் அளவுக்கு அவர்கள் தெளிவில்லாமல் குழம்பிக் கிடக்கிறார்கள்"!

என்று, அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், சென்னை 117-வது வட்ட கலைஞர் குறள் வளர்ச்சி மன்றச் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

கூட்டத்திற்கு இரா. கிருட்டினன் தலைமைதாங்கினார்.

நடிகமணி டி. வி. நாராயணசாமி எம்.எல்.சி, முன்னாள் மேயர் சா. கணேசன், எம். குமார், ஆர். டி. பாஸ்கரன் எம்.சி., சோ. கி. மூர்த்தி எம்.சி., வலம்புரி ஜான் ஆகியோர் பேசினர்.

இறுதியில் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் ஆற்றிய உரையாவது :—

"தி. மு. கழகத்தில் எம் ஜி.ஆருக்குக் கிடைத்திருந்த இடம், வேறு யாருக்கும் கிடைத்திருக்கக் கூடிய இடமல்ல !

தி. மு. கழகத்தில் இன உணர்ச்சி வளர்ந்த நேரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள், 'தமிழ்நாட்டு மக்கள் அப்படிப்பட்ட உணர்ச்சிக்கு ஆளாவது தமிழ்நாட்டின் வருங்காலத்திற்கு — நல்வாழ்வுக்கு நல்லதல்ல' என்று உணர்த்தி, 'மலையாளிகளாக இருந்தாலும் — ஆந்திரர்களாக இருந்தாலும் — கன்னடியராக இருந்தாலும் — ஏன் — வடநாட்டுக்காரராக இருந்தாலும் தமிழர்களிடம் செல்வாக்குப் பெற்றிடலாம்' என்ற நிலைக்கு வழிவகுத்துத் தந்தார்.

சிலர் எம். ஜி. ஆரை மலையாளி என்று பிரித்துப் பேசிய நேரத்திலேகூட நான் அவர்களையெல்லாம், 'அப்படிப் பேச வேண்டாம்' என்று கேட்டுக்கொண்டதுண்டு.

தமிழர்கள்மீது — கழகத்தின்மீது பற்று கொண்டவர்கள் எத்தனையோ மலையாளிகள் இருக்கிறார்கள் !

இராஜாஜி, 'தி. மு. கழக ஆட்சியைக் கவிழ்த்துவிட்டுக் குடியரசுத் தலைவரிடம் ஒப்படைக்க வேண்டும்' என்று பேசியதாலேயே நமக்கு எல்லாப் பிராமணத் தோழர்களும் பகைவர்களாக ஆகிவிடமாட்டார்கள் !

'எம்.ஜி.ஆர். கழகத்தைக் காட்டிக்கொடுத்தார்' என்று சிலர் இங்கே படபடப்புடன் சொன்னார்கள் ; 'காட்டிக்கொடுத்தார்' என்று நான் சொல்லமாட்டேன் ; அவர் செய்தது உண்மைக்குத் துரோகம் — நியாயத்துக்குத் துரோகம் !

'அவருக்கு இந்தத் துரோகம் பழக்கமானது' என்பது கலைத்துறையிலே பேசப்படுவதுதான் ; 'அவர் எத்தனையோ நடிகர்களை அழித்திருக்கிறார் ; அவரை நம்பி வந்த தயாரிப்பாளர்களையும் அழித்திருக்கிறார் ; அவரைவிட நடிக்கத் தெரிந்தவர்கள் திரையுலகில் இருக்கிறார்கள் ; என்றாலும், அவர்கள் யாரும் செய்ய நினைக்காத துரோகத்தை இவர் ஏன் செய்கிறார் என்றால், பிறரை வாழவிட்டால் தனக்குப் போட்டி வந்துவிடும் என்பதால்தான்' என்று பேசுகிறார்கள் !

அவ்வளவு தூரம் ஏன் — கழகத்திலிருந்த நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்களுக்கும் — இலட்சிய நடிகர் எஸ். எஸ் இராசேந்திரன் அவர்களுக்குக்கூட அவர் அப்படிச் செய்ததாகக் கூறுவார்கள் !

இதையெல்லாம் நான் சொல்வதால், எம். ஜி. ஆருக்கும் — எனக்கும் ஏதோ போட்டி என்று யாரும் கருதிடத் தேவையில்லை ; எங்களுக்குள் அப்படி எந்தப் போட்டியும் ஏற்பட்டதில்லை ; எங்களுக்குள் எந்தத் தகராறும் இருந்ததில்லை.

இதுவரையில் தி. [illegible] குற்றம் சொல்ல யாரும் பிறக்கவில்லை ; இப்போது இவர் குற்றம் சுமத்துகிறாரே — என்றுதான் எனக்கு ஆத்திரம் வருகிறது.

குற்றம் சுமத்துகிறவர், தனிப்பட்ட நபர்கள்மீது 'இன்ன குற்றம் செய்தார்' என்று சொல்லட்டும்.

நான்கூட தவறு செய்தவர்களைக் கண்டித்திருக்கிறேன் ; சிலவர் ஏதோ தவறு செய்தார்கள் என்பதற்காக நானும் கண்டித்துத்தான் இருக்கிறேன்.

என்றைக்கு நான் இந்த இயக்கத்தில் அடியெடுத்து வைத்தேனோ அன்றையிலிருந்தே அண்ணா அவர்கள் என்னைப் பற்றிச் சொல்லும்போது, 'தவறுகளைக் கண்டால் அன்பழகன் குடுதாங்கமாட்டான்' என்று சொல்லி வந்துள்ளார்.

ஆனால் இன்று கழகத்தின்மீது குற்றம் சொல்லும் எம். ஜி. ஆர். என்றைக்காவது கழகத்தில் தவறு செய்தவர்களைக் கண்டித்து ஏதாவது பேசியிருக்கிறாரா ? புதிதாக இன்று மட்டும் அவர் குற்றஞ்சாட்டும் அளவுக்குத் தி. மு. கழகத்தில் என்ன வந்துவிட்டது ?

கழகத்தைக் கட்டிக்காக்கும் ஒரு மகத்தான பொறுப்பையும் — நாட்டை ஆளும் பொறுப்பையும் ஏற்றுள்ள கலைஞர் அவர்கள் மீது தனிப்பட்ட முறையிலே எம். ஜி. ஆருக்குக் கோபம் இருக்கலாம் ; கலைஞருடைய மகன் முத்து நடிக்கிறான் என்றவுடனேயே — அவனுக்காக நாலைந்து ரசிகர் மன்றங்கள் தொடங்கப்பட்டவுடனேயே எம். ஜி. ஆருக்குக் கோபம் வந்துவிட்டது !

அண்ணா இருந்தபோதே, ஒரு தனி அமைப்பாக எம். ஜி. ஆர். ரசிகர் மன்றத்தைக் கூட்டித் தனி மாநாடு காண நினைத்தவர் எம். ஜி. ஆர். ; அண்ணா அதற்கு சம்மதிக்கவில்லை !

தமது சொந்தக் காரணத்துக்காகச் சுடப்பட்டு மருத்துவமனையில் இருந்த இந்த எம். ஜி ஆர்.— பி. ஏ. சாமிநாதன் மூலமாக — தனக்கு அமைச்சர் பதவி வேண்டும் என்று அண்ணாவிடம் சொல்லச் சொன்னவர் ; ஆனால் அண்ணா சொன்னார் — 'எம். ஜி. ஆர். மந்திரியாகும் அளவுக்கு நாடு கெட்டுப் போய்விடவில்லை' என்று !

அதுபற்றி அண்ணாவே எங்களிடம் சொன்னபோது, எங்களுக்குக்கூட வியப்பாக இருந்தது.

'இந்த ஆசைதான் — இன்னும் போக போகப் பாருங்கள் — அவருக்கு என்னென்ன ஆசையெல்லாம் வரப்போகிறது' என்று வேடிக்கையாகச் சொன்னார் அண்ணா !

என்றாலும், 'ஏதாவது தரவேண்டுமே' என்று சிறு சேமிப்புத் துறைத் தலைவர் பதவியை அளித்தார் அண்ணா !

அந்த ஆசை, கலைஞர் அமைச்சரவை அமைத்தபோதும் வந்தது எம். ஜி. ஆருக்கு !

நெருக்கடியான நேரம் வரும்போதெல்லாம் தமிழ்நாட்டை விட்டு ஓடி விடுகிற இந்த 'நாடோடி மன்னன்' கலைஞருக்கு டெல்லியிலிருந்து தொலைபேசி மூலம் 1971 தேர்தலில் பெற்ற வெற்றியை வாழ்த்திவிட்டு, 'அமைச்சரவையை நான் வந்த பிறகு அமைக்கலாம்' என்று சொன்னார்.

கலைஞர் அதற்குப் பதில் சொல்லும்போது, 'நாளைக்கே கவர்னரிடம் பட்டியலைக் கொடுத்தாக வேண்டுமே' என்றதும், அந்த ஆசை வெட்கமறியாமல் வெளியே வந்துவிட்டது — 'எனக்கும் ஒரு இடம் தாருங்கள்' என்று கலைஞரிடம் கேட்டேவிட்டார் !

அதற்குக் கலைஞர் விளக்கம் தந்தபோது, 'வேறு தொழில் பார்த்துக் கொண்டிருப்பவர்கள் அமைச்சராக முடியாது' என்று சட்டம் இருப்பதைச் சுட்டிக்காட்டித் தெளிவுபடுத்தினார்.

'இப்படி ஒரு சட்டம் இருந்தால் அதை மாற்ற வேண்டும் ; அல்லது அதை எதிர்த்துப் போராட வேண்டும்' என்று கேட்டவர் எம். ஜி. ஆர். !

அதன் பிறகு கேட்டால், 'நான் வேடிக்கைக்குக் கேட்டேன்' என்கிறார் !

அப்படி ஒன்றும் எம்.ஜி.ஆர். அமைச்சர் ஆகும் அளவுக்குத் தமிழ்நாடு ஈனத்தனமாக மாறிவிடவில்லை !

தமக்கு ஒத்துவராத காரியங்களையே திரும்பத் திரும்ப விரும்பிக் கொண்டிருப்பவர் அவர் ; அவர் அப்படி விரும்புவதற்குக் காரணம், அவரிடமுள்ள ஆதிக்க மனோபாவம்தான் — ஆதிக்க உணர்ச்சிதான் !

என்னையேகூட வலை விரித்தும் பார்த்தார்கள் ; என்னிடம்வந்து, 'நீங்கள் நேர்மையானவர் — ஒழுக்கமானவர்' என்றெல்லாம் புகழ்ந்தார்கள் !

ஏன் புகழ்கிறார்கள் என்று பார்த்தால், — 'கலைஞருக்குப் பதிலாக நான் முதலமைச்சனாக வர வேண்டும்' என்று சொன்னார்கள்.

நான் நேர்மையானவன்தானே ? ஒழுக்கம் உடையவன்தானே ? அப்படியானால் நானே சொல்கிறேன் — 'கலைஞர் முதல்வராக இருப்பது, தமிழ்நாட்டை எந்த வகையிலும் பாதிக்கவில்லை' என்று, அவர்களிடம் சொல்லி அனுப்பினேன்.

இவர்கள் பதவி ஆசையினால், 'கட்சிக்குள் பூசல்கள் வராதா' என்று எதிர்பார்க்கின்றனர் ; எதிர்க் கட்சித் தோழர்கள் எதிர் பார்க்கின்ற மாதிரி அல்லவா இருக்கிறது இந்தத் துரோகிகளின் எண்ணமும் ?

எப்படி எல்லாமோ பார்த்துவிட்டுக் கடைசியில் — பொதுக்குழுவில் பேச வேண்டியதை 8-10-72 அன்று தெருவிலே நின்று கேட்கிறார் — கட்சித் தோழர்கள் கணக்குக் காட்ட வேண்டும் ! என்று 'அவர்களின் உறவினர்கள் கணக்குக் காட்ட வேண்டும்' என்று !

கட்சியிலே இவரைவிடம் பணக்காரன் வேறு யார் இருக்கிறார்கள் ?

எம். ஜி. ஆருக்குப்போட்டதைப் போலவா எனக்கு வருமானவரி போட்டார்கள் ?

அப்படித் தி.மு.க. தோழர்கள்மீது சந்தேகம் வந்திருந்தால், இத்தனை நாள் ஏன் அதைக் கேட்கவில்லை' கேட்காமல் ஏன் கட்சியில் இருந்தார் ? அவருக்குச் சொரணை இல்லையா" என்று யாரும் கேட்கத்தானே செய்வார்கள் ?

எந்தப் போராட்டத்திலும் கலந்துகொள்ளாமல் — நெருக்கடியான காலக் கட்டங்களில் — தமிழ்நாட்டை விட்டே தலைமறைவாகிப் போனவர் எம்.ஜி ஆர். கட்சியில் உள்ள தொண்டனின் கணக்கைக் கேட்கின்ற அளவுக்கு அவருக்கு எங்கிருந்து வந்தது யோக்யதை ?

புதிதாகக் கட்சி தொடங்கியதிலிருந்து, 'போராட்டம்—போராட்டம்' என்று சொல்லிக் கொண்டிருக்கிறரே ! அந்தப் போராட்டத்தையும்தான் பார்த்தோமே !

புரசைவாக்கத்துக்கு என் வீட்டுக்கு மனுக்கொடுக்க 200 பேர் வந்தார்கள் ; அதிலே 120 பேருக்கு ஓட்டுரிமையே இருக்காது ; மற்ற எண்பது பேரும் போன தடவை எனக்கு ஓட்டுப் போட்டவர்கள்தானோ என்னவோ ? சரி — எல்லாருமே ஓட்டர்கள் என்றே வைத்துக்கொள்வோம் ; இரு நூறு பேருக்கு என்னைப் பிடிக்கவில்லை என்று வைத்துக் கொள்வோம் ; ஆனால், புரசைவாக்கத்தில் 42,000 வாக்குகள் எனக்குக் கிடைத்திருக்கிறது ; எனவே, மீது 41,800 பேருக்கு நான்தான் இருக்க வேண்டும்' என்பதுதானே நிலைமை — என்ன பதில் சொல்லுகிறார்கள் இதற்கு ?

கலைஞர் வீட்டுக்கு மனுக்கொடுக்கச் சைதாப்பேட்டைத் தொகுதியிலிருந்து ஆள்கிடைக்காமல் தியாகராய நகர் தொகுதியிலிருந்துதான் ஆட்கள் போக வேண்டியிருந்தது ; இந்த நிலையில்தானே இருந்தது அந்தப் போராட்டத்தின் வண்டவாளம் ?

அந்த ஊர்வலத்துக்குத் தலைமை தாங்கிப் போனவராவது நிதானத்தோடு போனாரா — கொடுத்த மனுவையேனும் சரியாக எழுதிக் கொடுத்தார்களா எல்லாமே கேலியாக இருந்திருக்கிறது !

கருணாநிதி அமைச்சரவையை பதவி விலகச் செய்யக் கருணாநிதியே சிபாரிசு செய்யவேண்டுமாம் !

ஊர்வலத்துக்குத் தலைமைதாங்கிப் போனவருக்கும் தெளிவில்லை — போராட்டம் நடத்துவதாகச் சொல்கிற தலைவருக்கும் தெளிவில்லை ! எலுமிச்சம்பழம் தந்து அனுப்பவேண்டிய நிலை தான் அன்று இருந்தது !"

நீதியிலே தலையிட்டு அநீதி புரிந்த ஆச்சாரியார்

நீதிமன்றத்தின் எதிர்ப்பையும் பொருட்படுத்தவில்லை

17—12—1952 அன்று சென்னை சட்டமன்றத்தில் திரு. கே. டி. கோசல்ராம் என்பவர் (இன்றைய இந்திரா காங்கிரசுப் பிரமுகர்) பேசுகையில் கூறியதாவது :—

"நீதிஸ்தலங்களிலெல்லாம் ஸ்ரீ இராசகோபாலாச்சாரியின் ஆட்சியிலே — ஸ்ரீஇராசகோபாலாச்சாரியின் பேய் ஆட்சியிலே— எத்தகைய நிலைமை இருக்கிறதென்பதைச் சொல்லுகிறேன்.

இவருடைய மகன் நரசிம்மன், பார்லிமெண்டுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது சம்பந்தமான தேர்தல் வழக்கை விசாரிக்க சேலம் ஜட்ஜாக இருந்த நடராச நாடார் என்பவரைத் தலைவராகக் கொண்ட ஒரு டிரிபியூனலை அரசாங்கம் ஏற்படுத்தியிருந்தது ; நடராஜ நாடார் தலைவராகவும் — விசுவநாதய்யரும் — இராமகிருஷ்ண ஐயரும் டிரிபியூனலில் அங்கத்தினர்களாகவும் இருந்தார்கள்.

இந்த மூவரில் ஒருவராகிய நடராஜ நாடார் 'ரிட்டையர்' ஆவதற்கு ஏழு மாதம்தான் இருக்கிறது ; இந்த ஏழு மாத காலத்திற்கு முன்னால் அவரைச் சேலத்திலிருந்து ஐந்நூறு மைல்களுக்கு அப்பால் — தென் கன்னட ஜில்லாவுக்கு—'புட்பால்' அடிப்பதுபோல் மாற்றிவிட்டார்கள் ; அங்கிருந்தவரை அச்சுறுத்தினர் ; 'சேர்மன் ஷிப்'மை இராஜினாமா செய் — உங்களுக்கு வேண்டியதெல்லாம் தருகிறேன்' என்றும் சொன்னார் ; இதை நான் அறைகூவலாகச் சொல்லுகிறேன்.

இராஜினாமாவை வாங்கினர் ; வாங்கிவிட்டு, அந்த இடத்தில் வேறொருவரை நியமித்தார் ; யாரை — அனந்தநாராயண அய்யர் என்பவரை !

என்னுடைய மகனுக்காக என்ன வேண்டுமானாலும் செய்வேன் என்று — நீதியிலேயே தலையிடவும் செய்தார் !

'ரிட்டையர்' ஆவதற்கு ஏழு மாதமே இருக்கும் ஒருவரை 500 மைல்களுக்கு அப்பால் 'டிரான்ஸ்பர்' செய்திருக்கிறார் என்றால் இது அடுக்குமா ?

உயர் நீதிமன்றம் ஆட்சேபனை தெரிவித்தது ; அதையும் பொருட்படுத்தாமல் அச்சுறுத்தி இராஜினாமாவை வாங்கினார்.

சாதிவெறியர்களுக்குச் சலுகை

இந்த அசெம்பிளி ஒரு கமிட்டியை அமைக்கட்டும் – விசாரிக்கட்டும் ; நான் சொல்லுகிறேன் ; அன்றைய இராஜாஜி இன்று இல்லை – வயது 75 ஆகிவிட்டது அவருக்கு ; அவரிடத்தில் போகின்றவர்கள், 'ஆர்த்தடாக்ஸ்' கொள்கையில் உள்ளவர்கள் !

மனிதர்கள் யாரும் போவதில்லை – செத்துப் போகின்ற கிழங்கள் போகின்றன ; கிழங்கள் சாதி வெறியை ஊட்டுகின்றன ; அவர்கள் சொல்கின்ற ஆட்களுக்குக் கொள்ளையில் பங்கு கொடுக்கிறார் !

ஆகவே, கொள்ளையடிக்கிறவர், 'பங்கு உனக்குத் தரமாட்டேன்' என்று சொல்லும்போதுதான் சாதி வெறி இருக்கின்றது !

நீங்கள் கொள்ளை அடிக்கின்றீர் – அதிலே நாங்கள் பங்கு கேட்கிறோம் !

பங்கு கேட்பதற்கு எங்களுடைய சொத்தா என்ன – அரசாங்கத்தின் சொத்து – பொதுமக்களின் சொத்து !

பொதுமக்களுடைய வோட்டு வாங்காமல் நாமினேஷனில் நீங்கள் வந்திருக்கிறீர்கள் ; நாங்கள் வோட்டு வாங்கி வந்திருக்கிறோம் ; பொதுமக்களுடைய வோட்டுப் பெற்று இத்தனை பேர்களும் இருக்கின்றார்கள் ; அவர்கட்கு இல்லாத உரிமை உங்களுக்கு எங்கிருந்து வந்தது என்று கேட்கிறேன்.

சட்டசபைக்கோ – சட்டசபைக் கட்சிக்கோ கட்டுப்படாத தலைவன் இருக்கமுடியாது.

கொள்ளையடிக்கிறவர்களின் தலைவராக இருந்தால் நீங்கள் கொள்ளைக்கூட்டத் தலைவனாகத்தானே இருக்கவேண்டும் ? இதைத் தவிர வேறு யாராக இருக்கமுடியும் ?

இல்லாவிட்டால், கொள்ளையில் பங்கு கேட்பதாகச் சொல்கிறவர் உடனே இராஜினாமா செய்துவிட்டு வரவேண்டும், இரண்டில் ஒன்று செய்ய வேண்டும்."

இலஞ்சம்வாங்கிய அதிகாரிகளுக்கு எதிராக வழக்கு

புதுடில்லி, நவ. 28—

மத்தியப் புலனாய்வுத் துறையினர் கடந்த செப்டம்பர் மாதத்தில் இலஞ்சம் — முறைகேடான நடவடிக்கை — பணம் கையாடல்—கள்ளக் கையெழுத்து போன்ற சட்ட விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபட்ட 27 அரசாங்க ஊழியர்களுக்கும், அரசாங்க சார்பற்றவர்கள் 20 பேருக்கும் எதிராக வழக்குத் தொடர்ந்தனர் ; இவர்களில் முக்கியமான சிலர் வருமாறு :—

பவனகரைச் சேர்ந்த வருமான வரி அதிகாரி ஒருவர் உள்ளூர் நிறுவனம் ஒன்றின் வருமான வரிக் கணக்குகளை மதிப்பீடு செய்ததற்காக ரூ. 40,000 இலஞ்சம் கேட்டதாகவும், இறுதியில் ரூ. 12,500 பெற்றுக்கொண்டதாகவும் குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறார்.

புதுடில்லியிலுள்ள இராணுவத் தலைமையகத்தைச் சேர்ந்தஇரண்டு சிவிலியன் அதிகாரிகள், புதுடில்லியிலுள்ள இந்திய யூனியன் வங்கியில் பொய் சான்றேடுகளைத் தாக்கல் செய்து ஆளுக்கு ரூ 3,000 கடன் பெற்றுக் கொண்டதற்காக வழக்குத் தொடரப்பட்டிருக்கிறார்கள்.

சென்னையிலுள்ள நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷனைச் சேர்ந்த முன்னாள் அதிகாரி ஒருவர் கார்ப்பொரேஷனுக்குச் சொந்தமான ரூ 33,000-த்தைக் கையாடல் செய்துவிட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறார்.

செப்டம்பர் மாதத்தில் தீர்ப்புக் கூறப்பட்ட 18 வழக்குகளில் ஒரு கெசட் பதிவுபெற்ற அதிகாரி — கெசட் பதிவு பெறாத 18 அரசாங்க ஊழியர்கள் — அரசாங்க தரப்பற்ற 9 பேர் ஆகியோருக்கு எதிராகச் சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்பட்டன.

கேப்டன் ராய் சௌதிரி என்பவர் தம்மிடம் நம்பி ஒப்படைக்கப்பட்ட ரூ 5இலட்சத்தைக்கையாடல் செய்து அதற்குப் பதிலாக தொழிலாளர் சம்பளப் பட்டுவாடா பதிவேட்டில் பொய்க் கணக்குகளை எழுதியதற்காகத் தண்டிக்கப்பட்டிருக்கிறார் ; இவருக்கு 8 ஆண்டு தீவிர சிறைவாசமும், ரூ. 30,000 அபராதமும் விதிக்கப்பட்டிருக்கிறது.

பரிசிலனை மாதத்தில் சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகளில் ஈடுபட்ட 8 கெசட் பதிவுபெற்ற அதிகாரிகள் — 71 அரசாங்க ஊழியர்கள் ஆகியோருக்கு எதிராக இலாகா ரீதியில் நடவடிக்கை எடுக்கப்பட்டது ; இவர்களின் 2 கெசட் பதிவுபெற்ற அதிகாரிகள் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர் ; இதே மாதத்தில் மத்தியப் புலனாய்வுத் துறையினர் 110 புதிய வழக்குகளை விசாரிக்கத் தொடங்கியிருக்கிறார் ; இந்த வழக்குகளில் 130 அரசாங்க ஊழியர்கள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் ; இவர்களில் 55 பேர் கெசட் பதிவுபெற்ற அதிகாரிகளாவர்.

பொய்ச் செய்திக்கு மறுப்பு

கவுந்தப்பாடி, நவ. 27—

அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றிய சேரமன் தலைவரும் — பவானி வட்ட உழவர் முன்னேற்றச் சங்கத் தலைவரும் — தி.மு.க. வட்டப் பிரதிநிதியுமான குருவாரெட்டியூர் தாயகம் சிவ. நடராசன் அறிவிப்பதாவது :—

"கடந்த 9—11—72-ந் தேதி வெளியான 'தினமலர்' இதழில் உண்மைக்குப் புறம்பாக—குருவரெட்டியார் தி. மு. கழகம் களைக்கப்பட்டதாகவும், நானும் மூனுஞ்சாவடி தி.மு.க. செயலாளர் மா. பெ. அம்மையப்பன் மற்றும் இயக்க நண்பர்கள் 300 பேருடன் அண்ணா தி. மு. கழகத்தில் சேர்ந்துவிட்டதாகவும் செய்தி வெளியாகியிருக்கிறது.

இதை நான் வன்மையாக மறுக்கிறேன் ; இப்பகுதியில் இவ்விதச் சலசலப்புக்கு சிறிதும் இடமில்லை.

கழகத் தோழர்கள் கழகத்தின் தலைமைக்கும்—அறிஞர் அண்ணா அமைத்த அரசைக் கட்டிக் காப்பதிலும் உறுதியாக இருக்கின்றனர் — இருந்து வருகின்றனர்.

வீண் வதந்திகளை யாரும் நம்ப வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன்."

பட்டுப் புழு வளர்ச்சிக்குப் புதிய திட்டங்கள்

புதுடில்லி, நவ. 28—

மைசூர் மாநிலத்தில் பட்டுப் புழு வளர்ப்புத் தொழில் மேம்பாடு செய்வதற்கென 19 புதிய திட்டங்கள் செயலாக்கப்பட இருக்கின்றன.

உணவுத் தாவரங்கள் — பட்டுப் புழு வளர்ப்பு — விதை விநியோக நிறுவனம்—விற்பனை, கூட்டுறவு ஆராய்ச்சி—பயிற்சி ஆகியவை சம்பந்தப்பட்ட இத்திட்டங்களுக்காக 1972—73-ஆம் ஆண்டிற்கு ரூ 45 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மக்களவையில், கேள்வி ஒன்றுக்கும் பதிலளிக்கையில் இத்தகவல் தரப்பட்டிருக்கிறது.

தமிழ்ச் சமுதாய உயர்வுக்கு தடைக்கல்லாக ஆகாதீர்

மேட்டு குடியினர்தான் நாடாள பிறந்தவர்களா?

சென்னைக் கூட்டத்தில் திருப்பத்தூர் இராமமூர்த்தி எச்சரிக்கை

சென்னை, நவ. 28 —

"இன்று மாணவர் சமுதாயத்தைத் திசை திருப்பும் வேலை நடைபெறுகிறது ; பள்ளத்திலே கிடந்த நம்மைக் கரை சேர்த்த கலைஞரின் கரத்தை வெட்ட மாணவர்களைப் பயன்படுத்துகிறார்கள் ; பொற் காலத்தை நோக்கிச் செல்லவேண்டிய மாணவர்கள், தவறான பாதைக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள் !

"நாலரைக் கோடி தமிழ்ச் சமுதாயத்திற்குக் கிடைத்த இந்த நல்லவரைத் தவற விடுவோமேயானால், நாசக்காடு நோக்கிப் போய்விடுவோம் !"

என்று, சென்னை 61-வது வட்டத்தில் நடந்த கழகப் பொதுக் கூட்டத்தில், திருப்பத்தூர் இராமமூர்த்தி எச்சரிக்கை செய்தார்.

61-வது வட்ட என். எஸ். கே. நகர் கலைவாணர் பொதுநல மன்றத்தின் சார்பில் கூட்டம், நடைபெற்றது.

தோழர் அ. மு. இஸ்மாயில் தலைமை வகித்தார்.

தோழர்கள் ஆதிகேசவலு, அரங்க பாண்டியன், கு. வீராசாமி, சட்டக் கல்லூரி மாணவர்கள் ஜாபர், தேவதாஸ், சிவகுமார், திருஞானம், முத்து வட்டச் செயலாளர் கிருஷ்ணன், முரசொலி அடியார், போலீசு கண்ணன், வலம்புரி ஜான், என்.வி.என். செல்வம், சுருளிவேலு எம்.எல் ஏ, இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ. ஆகியோர் பேசினர்.

ஊழல்களுக்கு உறைவிடம் காங்கிரசு ஆட்சி

இறுதியில் திருப்பத்தூர் இராமமூர்த்தி பேசுகையில் மேலும் கூறியதாவது :—

"இந்தச் சமுதாயத்தை மேம்படுத்திய கலைஞரும் — அவரது அரசும் எடுத்துக்கொண்ட முயற்சிகள் எண்ணிலடங்கா !

இந்தியாவிலுள்ள எந்த மாநில அரசும் எடுக்காத முடிவுகளை கழக அரசு பல்வேறு துறைகளில் எடுத்திருக்கிறது.

எனவே, கழக அரசுமீது காழ்ப்பு ஏன ? கழக அரசு செய்த குற்றமென்ன ? கழக அரசைக் கவிழ்க்க சதி ஏன் ?

1947-க்கு முன்னர் இந்தப் பகுதி எப்படி இருந்தது ? அதற்குப் பின்னாலே பங்களாக்கள் கட்டியவர்கள் யார் ? யார் ஆட்சியிலே இவ்வளவு சொத்துக்களைச் சேர்க்க முடிந்தது ? சாலைகளிலே ஓடுகின்ற மோட்டார்கள் லாரிகள் யாருடைய ஆட்சி காலத்தில் வாங்கப்பட்டன ?

இந்நிலைமை உருவாக்கியவர்கள் — ஊழலை ஏற்படுத்தியவர்கள் காங்கிரசு ஆட்சியினர் தானே ?

இந்தச் சொத்துக்களையெல்லாம் நாட்டுடைமையாக்கக் கழக அரசு முனைந்திருக்கிறது ; ஆகவேதான், ஏற்றம் பெற்றவர்கள் எரிச்சலடைந்திருக்கிறார்கள் — கழக அரசைக் கவிழ்க்கப் பின்னணியிலிருந்து கொண்டு சூழ்ச்சிகளைச் செய்கிறார்கள் !

மறைமுகமான எண்ணம் என்னவோ ?

'குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனம் செய்யப்பட வேண்டும்' என இராஜாஜி கூறுகிறார் ; இதற்கு மறைமுகமான எண்ணம் ஏதேனும் இருக்கத்தான் வேண்டுமல்லவா ?

1947-க்குமுன் உயர் நீதிமன்றத்தில் ஓரிரு கிறித்தவர்கள் — தமிழர்களைத் தவிர, உயர் சாதியினர்தானே நீதிபதிகளாக இருந்தார்கள் ? இன்றைக்கு 18 பேர்களில் 15 பேர் தமிழர்கள் நீதிபதிகளாக வீற்றிருக்கிறார்களே !

இந்த நிலையை உருவாக்கியது கழக அரசு — கலைஞர் ஆட்சி தானே !

எனவேதான், 'நம் வாழ்வில் கை வைத்து விட்டார்களே' என அவர்கள் (உயர் சாதியினர்) எண்ணுகிறார்கள் !

இதையெல்லாம் யாருக்காகச் செய்தார் கலைஞர் ? — கலைவாணர் நகரிலே குடியிருக்கும் ஏழைகளைப் பார்த்துக் கேட்கிறேன்.

தமிழக மக்களே—நிலைமைகளை உணருவீர்

பின்தங்கிய — பிற்படுத்தப்பட்டவர்களை மேட்டுக் குடியினருடன் — உயர் சாதிக்காரர்களுடன் — வட நாட்டுக்காரர்களுடன் உயர் பதவிகளுக்கும் போட்டியிட பயிற்சிப் பள்ளிகளை உருவாக்கியிருக்கிறது கழக அரசு ; இதைத் தமிழர்கள் உணரவில்லையே !

தமிழர்களிலேயே சிலர் தமிழ்ஆட்சியைக் காட்டிக் கொடுக்க முனைந்துவிட்டார்கள் : படித்த தமிழர்கள் இவைகளையெல்லாம் உணர வேண்டாமா ?

மேட்டுக் குடியினர் ஆட்சிக்கே வித்தூன்ற முயற்சி

இந்தியா முழுவதும் ஒரே கட்சி ஆட்சிதான் நடைபெறுகிறது ; தமிழ்நாட்டில் ஒன்றில்தான் வேறு கட்சி ஆட்சி நடைபெறுகிறது.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் பெரும்பாலான கிராமங்களில் பிற்படுத்தப்பட்ட இனமக்கள் — தாழ்த்தப்பட்ட இன மக்கள் வாழ்கிறார்கள் : அம்மாநிலத்தின் முதலமைச்சர் கமலபதி திரிபாதி உயர் சாதிக்காரர் !

சுக்லாவை நீக்கிவிட்டு மத்தியப் பிரதேசத்தில் சேத்தி என்கிற உயர் சாதிக்காரரை முதல்வராக்கிய மர்மம் என்ன?

மத்திய அமைச்சராக இருந்த சித்தார்த்த சங்கர் ரே வங்க முதலமைச்சராக்கப்பட்டிருக்கிறார் – உயர் சாதிக்காரர் என்பதாலா?

ஒருநாள், பிரும்மானந்த ரெட்டிக்கு டில்லியிலிருந்து தாக்கீது வருகிறது – 'உன் பதவியை இராஜினாமா செய்' என்று; அவர் உயர் சாதிக்காரர் இல்லை என்பதாலா?

இவைகளையெல்லாம் பத்திரிகைகளில் போட மறுக்கிறார்களே —இதுதான் பத்திரிகா தர்மமா ?

எல்லா மாநிலங்களிலும் மேட்டுக்குடியினர்தான் முதலமைச்சர்களாக இருக்கவேண்டுமா?

கல்கித் தோட்டத்தின் கவலை என்னவோ?

காந்தியார், இந்த நிலைமை ஏற்படுவதற்காகத்தான் விடுதலை கேட்டாரா ?

தமிழகத்தில் கலைஞர் முதலமைச்சராக இருப்பதைப் பார்த்துக் கல்கி தோட்டம் பதறித் துடிக்கிறது ; 'இந்தக் கலைஞர் தமிழ்ச் சமுதாயத்தை எங்கோ மேலே கொண்டுபோகிறார் — இப்படியே விட்டுவிட்டால் நாம்மேலே போக முடியாதே' என்று எண்ணுகின்றனர் போலும் !

இன்று கழகத்தில் ஏற்பட்டுள்ள பிளவில், மேட்டுக்குடிக்கும் மலே புரட்சி நடிகரை ஆட்டிப் படைக்கிறது!

கலைஞரை வாழ்த்தக் காந்தியார் இல்லையே !

ஒருநாள் காலையிலே பத்திரிகையிலே பார்க்கிறேன் — 'கலைஞர் மகன் அழகிரிக்குத் திருமணம் —மணமகள் அரிசனப் பெண்' என்று !

இந்த நேரத்தில் காந்தியை எண்ணிப் பார்க்கிறேன்—'இந்தத் திருமணத்தைக் கண்ணாரப் பார்த்து — வாயார வாழ்த்துக் கூற காந்தி இல்லையே' என்று எண்ணுகிறேன் !

சுதந்தரப் போராட்டக் காலத்தில் இராசகுரு — சுகதேவ் — பகத் சிங் போன்றோர் குற்றஞ் சாட்டப்பட்டு நீதிமன்றத்திலே நிறுத்தப்படுகிறார்கள் ; 'இவர்களுக்காக வழக்காட யார் இருக்கிறார்கள்' என்று நீதிமன்றத்தில் கேட்கப்படுகிறது ; எழுந்து நிற்கிறார் இளைஞர் ஒருவர் ; பாரிஸ்டர் ஆசப் அலி தான் அவர் ; முஸ்லிம் வகுப்பைச் சேர்ந்த ஆசப் அலியும்— பார்ப்பன வகுப்பைச் சேர்ந்த அருணாவும் சந்தித்தார்கள் ; காதலித்தார்கள் — திருமணம் செய்து கொண்டார்கள்.

நேருவின் தங்கை கிருஷ்ணா, அதீசிங் என்பவரைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டார்.

விஜயலட்சுமி பண்டிட் — மோதிலால் நேரு தடுத்தும் — காந்தியடிகள் செய்த சமரசத்திற்கும் பின்னர் — காதலித்தவரையே திருமணம் செய்து கொண்டார் !

சாதி — மத பேதமற்ற சமுதாயத்திற்கு வழிகாட்டும் தலைவர்

மைசூரைச் சேர்ந்த இராதாபாயைக் காதலித்து கலப்புத் திருமணம் செய்துகொண்டார் டாக்டர் சுப்பராயன் ?

சி. சுப்பிரமணியம் — நாயுடு வகுப்புப் பெண்ணை [illegible] மோகன் குமாரமங்கலம் — வங்கத்துப் பெண் கல்யாணியையும், காதலித்துத் திருமணம் செய்து கொண்டுள்ளனர்.

பெரும்பாலான அரசியல் தலைவர்கள் காதலித்துக் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்கள்தான் ! காதலுக்காகத்தான் சாதி விட்டுச் சாதியில் திருமணம் செய்து கொண்டிருக்கிறார்கள் !

ஆனால் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள்தான்—அரசியல் தலைவர்களில் முன்மாதிரியாக— 'தாழ்ந்த சாதிப் பெண் — அரிசனப் பெண் எனது வீட்டு மருமகளாவாள்' என்று அறிவித்தார்.

ஒப்பிலாப் பெருந்தகை — காந்தியின் வாரிசு — தன் காலத்தில், சாதி மத பேதமற்ற சமுதாயத்திற்கு வழிகாட்டுகிறார் !"

'கப்பலோட்டிய தமிழன்' பெயரால் புதிய கப்பல்

சென்னை—சிங்கப்பூர் பயணிகட்குப் பயன்படும்

சென்னை, நவ. 27—

வ. உ. சிதம்பரம் பிள்ளையின் நூற்றாண்டு விழா கொண்டாடும் இந்த ஆண்டில், மத்திய அரசுக்குச் சொந்தமான 'ஷிப்பிங் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா' எனும் கப்பல் நிறுவனம் 'பாஸ்சர்' என்ற பெயருடைய பயணிகள் கப்பலை பிரெஞ்சுக்காரர்களிடமிருந்து விலைக்கு வாங்கி— அக்கப்பலுக்கு வ. உ. சிதம்பரம் பிள்ளையின் பெயரைச் சூட்டியிருக்கிறார்கள்.

இக்கப்பல், 'சிதம்பரம்' என்று அழைக்கப்படும் ; நவீன வசதிகள் கொண்டது.

தற்பொழுது சென்னைக்கும்—சிங்கப்பூருக்குமிடையே சென்று கொண்டிருக்கும் 'ஸ்டேட் ஆப் மதராஸ்' என்னும் பழைய கப்பலுக்குப் பதிலாக இப்புதிய கப்பல் விடப்படும்.

இப்பயணிகள் கப்பல் நம் நாட்டு மக்கள் வசதிக்கேற்றவாறு தற்பொழுது மாற்றியமைக்கப்படுகிறது.

இக்கப்பலில் மொத்தம் 163 முதல் வகுப்புப் பயணிகளும், 1,530 மற்ற பயணிகளும் பயணம் செய்யலாம் சிலர் குடும்பத்துடன் பயணம் செய்வதற்கேற்ற வசதியும் உள்ளது ; முழுவதும் குளிர் சாதன வசதியுள்ளது ; ஒரு நீச்சல் குளமும், சினிமா — ரேடியோ — டெலிவிஷன் போன்ற பல நவீன வசதிகள் உள்ளன.

இக்கப்பல் அடுத்த ஆண்டு மார்ச் மாத முடிவில் சென்னைக்கு வந்து சேரும் ; சென்னையிலிருந்து சிங்கப்பூருக்கு மார்ச் மாத இறுதியில் புறப்படும்.

25 நாட்களுக்கு ஒரு தடவை முறையாக இக்கப்பல் சென்னை— சிங்கப்பூர் வழியில் செல்லும்.

தொழில் நிறுவனங்கட்கு வழங்கப்பட்ட லைசென்சுகள்

புதுடில்லி, நவ. 28—

1972 செப்டம்பர் 30-ந் தேதியுடன் முடிவடைந்த இரண்டு வார காலத்தில் பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்வதற்காக 52 தொழில் நிறுவனங்களுக்கு லைசென்சுகள் வழங்கப்பட்டன ; இதே காலத்தில் 18 முன் அனுமதிக் கடிதங்களும் வழங்கப்பட்டன.

வடசென்னை வாக்காளருக்கு சவால் விடுகிறார் மனோகரன்?

மக்கள் பிரதிநிதியின் 'நாணயம்---யோக்கியதை' பற்றி ஞானோபதேசம்

"தங்கள் தொகுதியின் சட்டமன்ற அல்லது நாடாளுமன்ற உறுப்பினர் தங்களது கடமையையும் பொறுப்பையும் சீராகச் செய்து வருகிறாரா -- நாணயமும் யோக்கியதையும் உள்ளவராகத் தமது பதவியைப் பயன்படுத்தி வருகிறாரா--மக்கள் நலன் கருதி நடக்கிறாரா--அல்லது சொந்தக் குடும்ப நலனே பெரிது என்று பாடுபடுகிறாரா--என்றெல்லாம் வாக்காளர்கள் தங்களது பிரதிநிதிகளைக் கண்காணித்து வரவேண்டும், தவறு செய்தால் சுட்டிக்காட்டித் திருத்த வேண்டும்."

இ. மனோகரன்
(சென்னை 109-வது வட்டத்தில் பேசியது)

நாஞ்சிலாரே – நன்று சொன்னீர்! உள்ளொன்று வைத்தும் புறமொன்று பேசாதவரல்லவா நீர்!

உள்ளது உள்ளபடியே தமது சொந்த அனுபவத்தை எடுத்து உரைத்திட்ட உம்மைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

'கழகத்தைவிட்டுப் போனவன் பர்மா அகதியைப்போல் அலைவான்' என்று நீர் அன்று சொன்னீர்; அதே நிலையில் இன்று நீரும் ஆகி விட்டதற்காக உள்ளபடியே வருந்துகிறேன்; 'பாவம் – பர்மா அகதி ஏதோ பேசுகிறார்' என்று உம்மீது அனுதாபப்படுவதைத் தவிர வேறொன்றும் சொல்வதற்கில்லை!

ஆனால் ஒன்று; சட்டமன்ற – நாடாளுமன்றப் பிரதிநிதிக்குரிய இலக்கணத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறீர் அல்லவா? அந்த இலக்கணத்தைப் புறக்கணித்து நடக்கும் மக்கள் பிரதிநிதிகளைக் கண்காணிக்க வேண்டும் என்று வாக்காளர் கடமையையும் அறிவுறுத்தியிருக்கிறீர் அல்லவா?--இதனை, வடசென்னை நாடாளுமன்றத் தொகுதி வாக்காளர்கட்குச் 'சமர்ப்பணம்' செய்கிறேன்.

மக்கள் பிரதிநிதி ஒழுங்காகத் தமது பணியை நிறைவேற்றுவிட்டால் கண்காணிக்க வேண்டியது வாக்காளர் கடமைதானே? அந்தக் கடமையிலிருந்து தவறிய குற்றம் அவர்களுடையது தானே?

தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினராக இருந்த நீர், ஒழுங்காக இல்லை என்பதனால்தானே உம்மை அங்கிருந்து விரட்டினார்கள்?

வடசென்னைக்குச் சென்ற பிறகாவது சீராக உமது கடமையைச் செய்தீரா? நாணயமும் யோக்கியதையும் உள்ளவராக நீர் நடந்து கொண்டீரா?

நான்காண்டுக்காலம் உமது யோக்கியதையைப் பார்த்துவிட்டுத் தானே, அடுத்த முறை உம்மை நாடாளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டாம் என்று (1971 தேர்தலின்போது) சொன்னார்கள்?

கலைஞரின் பெருந்தன்மையின் காரணமாக -- வடசென்னை கழகத் தோழர்களின் மன்னிக்கும் சுபாவத்தின் துணைகொண்டு நீர் மீண்டும் 1971-ல் நாடாளுமன்ற உறுப்பினராக ஆக்கப்பட்டீர்!

கழக ஊழியர்கள் கூட்டத்தில், நீர் சாதாரண தொண்டர்கள் காலிலெல்லாம் விழுந்து விழுந்து கெஞ்சியதை கழகத் தோழர்கள் மறந்தாவிட்டார்கள்?

'நான் செய்ததெல்லாம் தவறுதான்; இனி அப்படி நடந்து கொள்ளமாட்டேன்; என்னை மன்னித்து இந்த முறை எனக்கு ஒரு வாய்ப்பு அளியுங்கள்' என்று நீர் கண்ணீர் மல்க -- தழுதழுத்த குரலில் கெஞ்சியதைக் கண்டு கழகத் தோழர்கள் மனமிரங்கினார்கள்! அவர்கள் உழைப்பால் நீர் மீண்டும் நாடாளுமன்றம் சென்றீர்; அதன் பிறகாவது திருந்தினீரா -- நெஞ்சில் கைவைத்துப் பார்த்துச் சொல்லும்!

1971-க்குப் பிறகு நடந்த செயல்வீரர்கள் கூட்டத்தில் என்ன நடந்தது? கழகத் தொண்டர்கள் உம்மை நேருக்கு நேராகக் கேட்ட ஒரு கேள்விக்காவது பதில் சொல்ல முடிந்ததா? அவர்கள் உம்மீது காட்டிய குற்றச்சாட்டுக்களில் ஒன்றுக்காவது உரிய சமாதானம் உம்மால் கூறமுடிந்ததா? அந்தக் குற்றச்சாட்டுக்கள் எல்லாம் இன்னும் அப்படியேதான் இருக்கிறது என்பதை மறந்துவிடாதீர்!

இரண்டாவது முறையாக வடசென்னையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், நீர் அந்தத் தொகுதி மக்களுக்குச் செய்த தொண்டு என்ன? ஒன்று இரண்டாவது விரல் விட்டுச் சொல்ல முடியுமா?

தொகுதி மக்களை நீர் எந்த அளவுக்கு மதித்தீர் என்பதை, வடசென்னை வாசிகளைக் கேட்டால் அல்லவா தெரியும்; தொகுதி மக்களை மதிக்காத -- அவர்களுடைய தொடர்பையே விரும்பாத நீர், தொகுதி மக்களுக்கு ஞானோபதேசம் செய்யக் கிளம்பியிருப்பதுதான் வேடிக்கையாக இருக்கிறது!

நீர் தொகுதிக்கு செய்ய வேண்டிய கடமை இருக்கட்டும்; தேர்தல் முடிந்து கடந்த இரண்டாண்டுக்காலத்தில் நீர், ஒரு பொதுக் கூட்டத்திலாவது வடசென்னையில் பேசியது உண்டா? கூட்டத்துக்கு அழைக்க வந்தவர்களையாவது நீர் மதித்தது உண்டா? தொகுதி மக்களின் குறைபாடு -- முறையீடுகளை நீர் கேட்டறியா விட்டாலும், அவர்கள் வந்து உம்மைப் பார்க்கவாவது முடிந்ததா? நீர் அளிக்கும் பேட்டிகள் எல்லாம் யார் யாருக்கு என்பதும் வடசென்னை வாசிகளுக்கு நன்றாகத் தெரியுமே!

நாணயத்தைப் பற்றிப் பேசும் நாஞ்சிலாரே -- உமது நாணயம் என்ன? -- பட்டியல் போட்டுக் காட்டலாமா? கோர்ட்டுக்கு வருகிறீரா? சாட்சியங்களோடு வந்து அம்பலப்படுத்தத் தயாராகவே இருக்கிறார்கள் வடசென்னை வாக்காளர்கள்! மற்றுக் குறைக்குத் தென் சென்னையிலிருந்தும் வரப் பலர் தயாராயிருக்கிறார்கள்!

1957 தேர்தலின்போது மாயவரம் தொகுதியில் நீர் நாடாளுமன்றத்துக்குப் போட்டியிட்டீரே -- அப்போது உமது நிலை என்ன-- இப்போது உமது நிலை என்ன என்பதையும் மக்கள் கணக்கிட்டுத்தான் வைத்திருக்கிறார்கள்?

'அன்னக்காவடியான என்னை அண்ணா அனுப்பி வைத்தார்; வெறுங் கையுடன்தான் வந்து தேர்தலில் போட்டியிடுகிறேன்; எனக்கு எனது பேச்சுதான் மூலதனம்' என்று அன்று மாயவரம் தொகுதியில் பேசினீரே -- அந்த நிலையில்தான் இன்றும் இருக் இருக்கிறீரா?

திருமணத்தை முடித்துக்கொண்டு குடும்பம் நடத்த வழியில்லாமல் தவித்தபோது, திருச்சியிலே உள்ள கழகத் தோழர்கள் உமது குடும்பத்துக்கு வேண்டிய தட்டுமுட்டுச் சாமான்களெல்லாம் வாங்கிக்கொடுத்து அனுப்பி வைத்தார்களே -- நினைவு இருக்கிறதா?

பச்சையப்பன் கல்லூரியில் நீர் எம்.ஏ. படித்தபோது கல்லூரிக் கட்டணம் கட்டப் பணம் இல்லாமல் தவித்தபோது, உமக்கு அறிஞர் அண்ணா அவர்களே பணம் கட்ட ஏற்பாடு செய்தாரே– நினைவிருக்கிறதா?

நீர் படித்து முடிந்ததும் எந்த அலுவலகத்துக்கு வேலைக்குப் போனீர்? ஏதாவது சம்பாதித்தது உண்டா?

வெளியூர்க் கூட்டங்களுக்கு அழைப்பு வந்தாலன்றி வேறு பிழைப்பு இல்லை என்று இருந்த நீர், அன்றாடம் கழகத் தோழர்களின் அழைப்பையும் -- மணியார்டரையும் எதிர்பார்த்துக் கொண்டு இருந்த நீர் -- இன்று இந்த நிலைக்கு எப்படி வந்தீர்?

வீடு -- பங்களா -- கார் -- டாக்சி -- இன்னும் இருக்கின்ற அசையும் -- அசையாச் சொத்துக்கள் எல்லாம் எங்கிருந்து வந்தன? அதற்கெல்லாம் கணக்கு உண்டா? நீர் காட்டாவிட்டாலும், உமது கணக்கு வடசென்னை மக்கள் கையில் இருக்கிறது என்பதை மட்டும் மறந்துவிட வேண்டாம்.

நீர் சொன்னதைப்போல், உம்மையும் வடசென்னை வாக்காளர்கள் கண்காணித்துக் கொண்டுதான் வந்திருக்கிறார்கள்.

நீர் அவர்களுக்குச் சவால் விடுவதைப்போல் இப்போது பேசியிருக்கிறீர்; அவர்களுக்கும் இது வேண்டியதுதான்; ஒருமுறைக்கு இரண்டு முறையாக உம்மைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய அவர்களுக்கு இதுவும் வேண்டும் – இன்னமும் வேண்டும்.

பர்மா அகதியாரே – உமக்கு எனது பணிவான வேண்டுகோள்; நீர் தயவுசெய்து தேனாம்பேட்டை ஆலயம்மன் கோவில் திடலில் பேசிய அதே பேச்சை, வடசென்னைத் தொகுதியில் உள்ள ஏதாவது ஓர் இடத்தில் மீண்டும் பேசவேண்டும்; அப்போதுதான் அந்த வாக்காளர்கட்கும் 'புத்தி'வரும். மக்கள் பிரதிநிதியான நீரும் உமது கடமையைச் செய்ததாக ஆகும்; தயவுசெய்து இதைச் செய்ய வேண்டும்.

— சேனா'

அமைச்சர் மாதவன் கருத்துரை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மக்களைச் சந்தித்து உம்முடைய முகத் திரையைக் கிழித்து வருகிறார்கள்.

நாங்கள் மக்களைச் சந்தித்துக் கொண்டிருக்கும்போது, புரட்சித் தலைவர் நாள்தோறும் பத்திரிகை நிருபர்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்; பத்திரிகை நிருபர்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்.

கொள்கை இல்லாதவர்கள், கூட்டத்தையும் -- பத்திரிகைகளையும் வைத்துக்கொண்டு அரசியலை நடத்த முடியாது என்பதை உணரவேண்டும்.

தமிழர் ஆட்சி வந்தது--சாதனைகள்பல புரிந்தது

நான்கு கோடி தமிழ்ச் சமுதாயத்துக்கு மட்டுமன்று -- கடல் கடந்து வாழும் தமிழர்களுக்கும், 'தமிழ் இனத்தின் ஆட்சி மலர்ந்திட வேண்டும் -- தமிழ் மொழிக்கும், தமிழருக்கும் பாதுகாப்பு வேண்டும்' என்கின்ற உணர்வு மேலோங்கி நிற்கிறது!

எனவே தமிழ்நாட்டில், தமிழர்தம் வரலாற்றுப்படி -- தமிழர்தம் ஆட்சியே மலர்ந்திட வேண்டும் என்கின்ற ஏகப்படி -- இந்த நாட்டில் தமிழர்களுடைய ஆட்சியையே கொலு ஏற்கச் செய்தார்கள் மக்கள்! தமிழருடைய ஆட்சி வந்தது -- சாதனைகள் பல சாதிக்க முனைந்தது!

ஏழை எளியவருக்கு நன்மைகள் பல புரிந்து, தமிழர்தம் எண்ணத்துக்கும் -- ஏக்கத்துக்கும் தீர்வு காண முற்படுகின்ற வேளையில், 'இந்த ஆட்சியைக் கவிழ்த்துவிட வேண்டும் -- ஒழித்துவிட வேண்டும்' என்றெல்லாம் கனவுகள் கண்டுகொண்டிருப்பவர்களைப் பற்றி இந்நாட்டு மக்கள் என்ன நினைக்கமாட்டார்கள்?

இந்த ஆட்சியும் -- பதவியும் யாருக்கும் உரிமையன்று; ஆட்சியிலே நாங்கள் உள்ள வரையில், எங்களை ஆட்சியில் அமர்த்திய ஏழை எளியவர்க்கும் பாட்டாளி மக்களுக்கும் சேவை செய்திட வேண்டும்.

1967-ல் தி. மு. கழகம் ஆட்சிக் கட்டிலில் ஏறிய நாளிலிருந்தே, கழக ஆட்சியைப் பொறுக்க இயலாதவர்கள், எந்தெந்த ரூபத்திலாவது குழப்பம் செய்து கொண்டேதான இருந்து வருகிறார்கள்; இதனை நினைக்கும் போதுதான் கவலையாக இருக்கிறது.

தி. மு. கழகம் ஆட்சியில் அமர்ந்த பின் எப்படியெல்லாம் ஏழை எளிய மக்களுக்கு நன்மைகளைச் செய்கிறது--புதிய புதிய சட்டங்களின் மூலம் எப்படியெல்லாம் தொழிலாளர்களுக்குப் பலன் கிடைக்கச் செய்கிறது என்பதை மக்கள் உணர்ந்திடாமல் இல்லை.

இப்படியே விட்டுவிட்டால் தி. மு. கழக ஆட்சி நிலையான ஆட்சியாக அமைந்து -- மக்களின் செல்வாக்கை என்றென்றும் பெற்றுவிடும் என்கின்ற பொருமை உள்ளம் கொண்டவர்கள், ஆட்சியில் இருப்பவர்களை அமைதியாகச் சிந்திக்கவிடாமல் -- ஆற்றலையும் திறமையையும் இந்த வாய்ப்புமூலம் வெளிப்படுத்திட வழி வகுக்காமல் தொல்லை கொடுத்துக்கொண்டே இருப்பது என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்!

இந்தத் தமிழ்ப் பூமியை வளமிக்க பூமியாக மாற்றிடக் கழக அரசினால் முடியும்; அதற்கான திட்டங்கள்—சட்டங்களை உருவாக்குவதற்கு ஆட்சியில் இருப்பவர்கள் ஆற்றல்உள்ளவர்கள்தான்!

1963-ல் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் கழகம் இருந்த நேரத்திலேயே, 'விவசாயப் பெருங்குடி மக்கள் குடியிருக்கும் மனையை அவர்களுக்கே சொந்தமாக்கிட வேண்டும்' என்ற தீர்மானம் ஒன்றினை சட்டமன்றத்தில் கொண்டுவந்து, 'சட்டமாக்கிட வேண்டும்' என்று கூறினேன்.

'இராமச்சந்திரா--என்ன குற்றம் கண்டாய்'

ஆனால் அந்தச் சட்டத்தை காமராசர் மிக ரசித்துவிட்டுத் தூக்கி எறிந்த பெருமையைத் தவிர வேறு என்ன ஆயிற்று? அண்ணா ஆட்சி வந்த பிறகுதான், அதற்கான சட்டத்தையே பெருவாரியான உறுப்பினர்களின் ஒப்புதலோடு இயற்றிட முடிந்தது; புரட்சித் தலைவரே - இது தவறு?

நான்கு பக்கமும் வயல் -- நடுவே சிறு திடல் -- அதிலே விவசாயி காலகாலமாகக் குடியிருக்கிறான்; ஆனால் அந்தக் குடிமனை அவனுக்குச் சொந்தமில்லை -- அதில் நிரந்தரமாக கவலையில்லாமல் குடிவாழும் உரிமை அவனுக்கு இல்லை என்ற நிலையை கழக ஆட்சி வந்த பிறகல்லவா மாற்றியது?

அவன் குடியிருக்கும் குடிமனையை அரசே விலை கொடுத்து வாங்கி--; அவனுக்கு உரிமையாக்கிக் கொடுத்தது உண்டா இல்லையா?

'அட -- இராமச்சந்திரா, இதையா குற்றம் என்கிறாய்' என்று அந்த விவசாயி கேட்பானா -- மாட்டானா?

நல்ல தீர்ப்பு நாட்டிற்கு தேவை

நான் ஜப்பான் நாட்டிற்குச் சென்றபோது மீனவர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைத்து விசைப் படகுகள் மூலம் மீன பிடித்து இலட்ச இலட்சமாக வருவாயை ஈட்டி வருவதைக் கண்டேன்.

அதுபோல், அந்த ஜப்பான் நாட்டுக்காரரையே இங்கு அழைத்து வந்து -- தமிழ்நாட்டுக் கடற்கரையோரங்களில் மீன் பிடிக்கும் மீனவத் தோழர்களுக்கு 'யான் மார்க்' விசைப் படகுகளை உற்பத்தி செய்யும் வகையில் பத்துக் கோடி ரூபாய் செலவில் ஒரு தொழிற்சாலை அமைத்திட மத்திய அரசிடம் அனுமதி கேட்டிருக்கிறோம்.

இதுபோன்ற பற்பல நன்மைகளை ஏழைகளுக்குச் செய்வதற்கு அமைதியாக நம்மைச் சிந்திக்க செயல்பட விடமாட்டோம் என்கிறார்களே!

கண்ணொளி இழந்த மக்களுக்குக் கண்ணொளி வழங்கும் திட்டத்தை -- பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு தரும் திட்டத்தை -- அடுக்கடுக்காக இப்படிப் பல நன்மைகளைச் செய்து வரும் கலைஞர் அவர்களின் ஆட்சி அழிக்கப்பட வேண்டுமா -- நல்ல தீர்ப்புக் கூறுங்கள்!"

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible] அச்சகத்தில் [illegible] சென்னை [illegible] இந்த வெளியிடப்படுகிறது.